TAMIL STUDIES CONFERENCE
தமிழியல் மாநாடு

# "கடந்த காலத்தின் அடித்தடங்கள்"

## ஏழாவது தமிழியல் மாநாடு,
## தொரொன்ரோப் பல்கலைக் கழகம், மே 11-12, 2012

கடந்த காலம் பற்றிய ஆய்வு, அறிவு, எதிர்வினை, உணர்வு என்பனவற்றை நாம் எப்படிப் புரிந்து கொள்கிறோம் என்ற தேடலே இந்த ஆண்டு மாநாட்டின் தொனிப்பொருளாகும்.

வரலாறு, நினைவு, மரபு போன்ற அனைத்துமே நமது இன்றைய கால நோக்குகளாலும் கணிப்புகளாலும் எதிர்காலம் பற்றிய எண்ணங்களாலும் கட்டமைக்கப்பட்டவையாகும். ஆட்சி பெற்றிருக்கும் அல்லது மேலோங்கிய நிலையில் தொழிலாற்றும் பெருங்கதையாடல்களுக்கு மாற்றாக எழுச்சி பெற்ற வரலாறுகளும் கதையாடல்களும்கூடத் தம்மளவில் பக்கச் சார்பாகவும் சிலவற்றைத் தவிர்த்து ஒதுக்கியுமே இருந்து வந்துள்ளன.

கடந்த காலத்தையும் வரலாற்றையும்,வரலாற்றியலையும் இன்றைய காலத்தின் கருத்தியலுக்கும் அரசியலுக்கும் வளமாக்கியாகப் பயன்படுத்த முற்படுகிறபோதுதான் பெரும் சிக்கல்கள் எழுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் கடந்த காலத்தை நாம் எவ்வாறு எடுத்துரைப்பது? நமக்கான வரலாற்றுச் சான்றுகள் எவை?யாருடைய கதையாடல்கள் பெருமெடுப்பில் நிலவுகின்றன? ஆட்சியாளர்களதா அல்லது மற்றவர்களதா? எதை நினைவு கொள்கிறோம்? எதை மறக்கிறோம்? இந்தக் கேள்விகள் நமது அக்கறையையும் ஆய்வையும் கோருபவை.

கடந்த காலத்தின் அடித்தடங்கள் என்றால் அவை வெறுமனே ஆவணக் காப்பகங்களுக்குள் மட்டும் உறைந்து கிடப்பவை அன்று. நினைவு அழிதலும், நினைவு எழுதலும் எவ்வாறு நமது சடங்குகள், துயர் பகிரும் நிகழ்வுகள்,நிலக்காட்சி, திரைப்படங்கள், கழிவிரக்கம், தேசிய விடுதலைப் போராட்டங்கள், புரட்சி ஆகியனவற்றுள் வனையப்பட்டிருக்கின்றன என்பதே மாநாட்டின் ஆய்வு மையம்.

இந்தப் பின்னணியில் ஆய்வுக் கட்டுரைப் பொழிப்புகளையும், ஆய்வு அமர்வுகளுக்கான முன்மொழிவுகளையும் வரவேற்கிறோம்.புலம்பெயர் வாழ்வு, அலைந்துழலும் சமூகங்களின் அரசியல், பண்பாட்டுச் சிக்கல்களைப் பற்றிப் பேசும் ஆய்வுகளும் வரவேற்கப்படுகின்றன.

**ஒகஸ்ட் 31, 2011க்கு** முன்பாக **info@tamilstudiesconference.ca** என்ற மின் அஞ்சலுக்கு உங்கள் ஆய்வுப் பொழிப்புகளையும் முன்மொழிவுகளையும் அனுப்புங்கள்.